06 வருட காலமாக வெற்றிகரமாக இயங்கி வரும் கல்வி நிறுவனம்

# தமிழ் மொழியும் இலக்கியமும்

ZOOM ONLINE CLASS

# தரம் 06

முதலாம் தவணை

## அலகு 04 – குரங்குச் சேட்டை




தமிழ் ஆசான்

"அகரம் தினேஸ்"

SLTS, BA (honours) IN TAMIL DIP IN G/D & ARTIFICIAL INTERLLIGENCE

REGISTER NOW 0778054232


AGARAM DHINES ONLINE ACADEMY

# குரங்குச் சேட்டை

நாம் அனைவரும் குரங்குச் சேட்டைகள் கண்டு லயிப்பவர்களே. எந்தநேரமும் குரங்குகள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டும் கொப்புக்குக் கொப்பு பாய்ந்து செல்வதும் கண்ணால் கண்டு மகிழும் காட்சிகளே. மிருகக்காட்சிச் சாலைக்குச் சென்றால் கூடுதலாக நாம் தாமதிப்பது குரங்குகள் தங்கும் இடங்களே. பிள்ளைகளைப் பொறுத்த மட்டில் அவ்விடத்தை விட்டு அகலாது எந்தநேரமும் சேட்டைகள் செய்து கொண்டு நிற்கும் குரங்குகளைப் பார்ப்பதில் அவர்களுக்கு அதிக பிரியம்.

இக்குரங்குகள் தமது குட்டிகள் மேல் காட்டுகின்ற அன்பும் பரிவும் மனித இனத்துக்கு உண்டா? எனச் சிந்திக்க வைக்கின்றது. தனது குட்டிகளை வயிற்றின் அடிப்பகுதியில் இறுக்கித் தழுவ வைத்துக் கொண்டிருக்கின்றன. அக்குட்டிகளுடனேயே பாய்கின்றன. தளராது இறுக்கமாக நிற்பதைக் குரங்குப் பிடி என்கிறார்கள் போலும். குரங்குச் சேட்டையில் தம் மனங்களையும், கண்களையும் பறிகொடுத்து நிற்காதவர்கள் எவரும் இல்லை எனலாம். அவ்வகையில் குரங்கின் சேட்டைகளைப் பற்றி நாவாலியூர் சோமசுந்தரப் புலவர் தனது பாடல்கள் மூலம் காட்டியுள்ளதை இப்போது பாடத்தில் படிப்போம்.

Agaram Dhines

**அ. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு ஒத்த பொருட்சொற்கள் எழுதுங்கள்.**

| | | |
|---|---|---|
| (உ-ம்) உணவு | உண்டி | ஆகாரம் |
| 1. மகிழ்ச்சி | …………… | …………… |
| 2. காடு | …………… | …………… |
| 3. நெருப்பு | …………… | …………… |
| 4. ஆசை | …………… | …………… |
| 5. தாமரை | …………… | …………… |
| 6. நித்திரை | …………… | …………… |

**ஆ. கீழே தரப்பட்டுள்ளவற்றிற்கு எதிர்ப்பாற் சொற்களை எழுதுங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| 1. இந்திரன் | …………………… | 5. வேடன் | …………………… |
| 2. ஒருவன் | …………………… | 6. அப்பன் | …………………… |
| 3. வணிகன் | …………………… | 7. வாலிபன் | …………………… |
| 4. அரசன் | …………………… | 8. வேலைக்காரன் | …………………… |

**இ. பின்வரும் அஃறிணைப் பெயர்களைத் தொடர்புபடுத்துங்கள்.**

| | |
|---|---|
| 1. சேவல் | மறி |
| 2. காளை | கலை |
| 3. கிடாய் | பேடு |
| 4. பிணை | பெட்டை |
| 5. கடுவன் | பசு |

**ஈ. பின்வரும் ஒரு சொல் பல பொருள் என்பதற்குப் பொருந்தாத சொல்லின் கீழ்க் கீறிடுங்கள்**

1. தருமம், அவி, புண்ணியம், அறம்
2. கவி பாட்டு, குரங்கு, அரவம்
3. பிடி, பற்றுதல், பெண்யானை, நோய்
4. பதி, இறைவன், உறுதி, தலைவன்
5. அலை, திரை, அலைதல், கரை
6. உண்டி, வயிறு, சாப்பாடு, உலகம்

**உ. பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொற்களை எழுதுங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| 1. கடல் | …………………… | 5. சீரான | …………………… |
| 2. பீதி | …………………… | 6. மிளிர்தல் | …………………… |
| 3. காற்று | …………………… | 7. சுலபம் | …………………… |
| 4. தாமரை | …………………… | 8. அறம் | …………………… |

**ஊ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. மரக்கிளையில் தொங்கிய கூடு எதனுடையது?
   ………………………………………………………………………………
2. ஆண் குரங்கை எப்படி அழைப்பர்? பெண் குரங்கை எப்படி அழைப்பர்?
   ………………………………………………………………………………
3. குளவிக் கூட்டைக் கடுவன் கல்லால் எறிந்ததால் குளவிக்கு ஏற்பட்ட துன்பம் பற்றிப் புலவர் எவ்வாறு கூறுகிறார்?
   ………………………………………………………………………………
   ………………………………………………………………………………
4. குளவி எந்தத் திசை நோக்கித் துரத்தி வந்தது?
   ………………………………………………………………………………
5. மலேரியாக் காய்ச்சலை வேறு எப்படி அழைப்பர்?
   ………………………………………………………………………………

Agaram Dhines

6. மந்தியினங்கள் எங்கு எப்படிக் காவடி எடுத்ததாகப் புலவர் வர்ணிக்கின்றார்?

......................................................................................................

......................................................................................................

**எ. பின்வருவனவற்றிற்கு எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுங்கள்.**

1. உள்ளே ........................
2. ஈறு ........................
3. நீதி ........................
4. நியாயம் ........................
5. வேகம் ........................
6. சப்தம் ........................
7. வீசுதல் ........................
8. பொருத்தமான ........................

**ஏ. பின்வருவனவற்றிற்கு உரிய தொகுதிச்சொற்களைக் கீறிடப்பட்ட இடத்தில் எழுதுங்கள்.**

(உ-ம்) ஆ (பசு) நிரையில் சிங்கமும் நின்றது.

1. கல் ............................ வண்டியில் ஏற்றப்பட்டது.
2. மாந்........................ குயில் கூவியது.
3. விவசாயி வீட்டில் உள்ள நெற்........................ கண்டு அகமகிழ்ந்தான்.
4. காகம் அரசியின் மணி......................... தூக்கிச் சென்றது.
5. வாழைப்பழச் ................ ஒன்று வாங்கி வந்தேன்.
6. மலை ....................... இன்றி மழை பெய்யாது.

**ஐ. பின்வருவனவற்றுக்குரிய ஒலிகளை எழுதுங்கள்.**

1. நாய் குரைப்பது போல பசு ..............................
2. எருது முக்காரமிடுவது போல புலி ...........................
3. யானை ..................... போல குதிரை கனைக்கும்.
4. ஆடு கத்துவது போல புறா ................................
5. மயில் ......................... போல ஆந்தை அலறும்.
6. வண்டு இரைவது போல நரி ..................................

**ஒ. தடித்த எழுத்தில் உள்ள ஒருமைச் சொற்களுக்குரிய பன்மைச் சொற்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.**

1. **செடி** வளர்த்துப் பூப் பிடுங்கினேன்.

   ................................................................................

2. பாடசாலையில் **சிறுவன்** பாடம் படித்தான்.

   ................................................................................

Agaram Dhines

3. **பல்** துலக்கி முகம் கழுவினேன்.

.................................................................................

4. உணவு உண்டபின் **பழம்** சாப்பிட்டேன்.

.................................................................................

5. **முள்** தைத்ததால் கால் வீங்கியது.

.................................................................................

6. **காடு** வெட்டிப் பயிர் செய்து அலுத்துவிட்டான்.

.................................................................................

**ஓ. கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிந்து கட்டுரை எழுதுங்கள்.**

1. உழவுத் தொழில்
2. எனது பாடசாலை
3. நான் விரும்பும் தொழில்
4. மாலைக் காட்சி

(பயிற்சிக் கொப்பியில் எழுதுங்கள்)

**சொற்றொடர் வாக்கிய வகையை அறிவோம்.**

Agaram Dhines

**சொற்றொடர்**

- ✶ சொற்றொடர் என்பது வாக்கியத்தின் ஓர் உறுப்பு ஆகும்.
- ✶ சொற்றொடர் ஒரு சொல்லாகவும், சொற்களின் தொகுதியாகவும் அமையலாம்.

உதாரணம்:

மழை, பூமி, புத்தகம், வீடு, மரம் - பெயர்த்தொடர்

வந்தான், விழுந்தது, படித்தான், பறக்கிறது, எழுதுகிறாள், அழுகிறது- வினைமுற்றுத்தொடர்

வாக்கியங்களில் சொற்றொடரைக் காணலாம்.

உதாரணம்

மழை நன்றாகப் பெய்தது.

பூமி உருண்டை வடிவமானது.

இங்கு ‘மழை’, ‘பூமி’ என்பன **எழுவாய்த் தொடர்**

‘பெய்தது’, ‘வடிவமானது’ என்பன **பயனிலைத் தொடர்**

**எழுவாய் :-**

எழுவாய்ப் பகுதி கருத்து எழும் பகுதியாகும். பயனிலையோடு **யார் அல்லது எது, எவை** என்னும் கேள்வியைக் கேட்டால் வரும் பதில் எழுவாய் ஆகும்.

கண்ணகி புத்தகம் படித்தாள். - யார்? - **கண்ணகி** எழுவாய்

தேங்காய் கூரையில் விழுந்தது. எது? - **தேங்காய்** எழுவாய்

கோள்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. எவை? - **கோள்கள்** எழுவாய்

**பயனிலை**

எழுவாய் பற்றி என்ன சொல்லப்படுகிறதோ அது பயனிலைப் பகுதி ஆகும்.

கண்ணகி படித்தாள்.

தேங்காய் விழுந்தது.

இங்கே படித்தாள், விழுந்தது என்பன பயனிலைப் பகுதியாகும்.

**செயற்படுபொருள் :-**

பயனிலையுடன் **எதனை, யாரை, எவற்றை** முதலியவற்றுள் ஒன்றை வினவிச் செயப்படுபொருளை அறிந்து கொள்ளலாம்.

எதனைப் படித்தாள் - **புத்தகம்** செயப்படுபொருள்

எதனைச் சுற்றி வருகின்றன. – **சூரியன்** செயப்படுபொருள்.

துரோணர் வில்வித்தை கற்பித்தார்.

கண்ணன் நாணில் அம்பை ஏற்றினான்.

| **எழுவாய்** | **பயனிலை** | **செயப்படுபொருள்** |
| --- | --- | --- |
| துரோணர் | கற்பித்தார் | வில்வித்தை |
| கண்ணன் | ஏற்றினான் | அம்பை |

**ஔ. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.**

1. இராமர் சீதையை மணந்தார்.
2. நான் பாடத்தைப் படிக்கிறேன்.
3. எலியைப் பூனை பிடித்தது.
4. பூஞ்செடியை நான் நடுகிறேன்
5. புலவர்கள் பாடல்களைப் பாடுகின்றனர்.
6. பாம்பு முட்டையைக் குடித்தது.
7. ஒலிம்பிக் போட்டியில் நான் வெற்றி பெற்றேன்.
8. அரசன் அழகிய நகரை அமைத்தான்.
9. நான் பின்னேரம் யாழ்ப்பாணம் போகிறேன்.
10. யான் எழுதியது இவ்வெழுத்து.

Agaram Dhines

| | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |
| 9. | | | |
| 10. | | | |

**க. ணகர னகரப் பேதச் சொற்களைப் பொருத்தமான இடத்தில் வைத்து நிரப்புங்கள்.**

1. சினத்தை ஒரு …………………….. தானும் காத்தல் அரிது.
   அப்பொருள் ………….மிக்கது (கணம், கனம்)
2. அவன் சுற்றத்தாரை இழந்து …………………….. நின்றான்.
   போரின் வேகத்தைத் ……………………..சமாதானம் காண்பதே நன்று.
   (தனித்து, தணித்து)
3. அரசனின் ……………………யை மீறி நடப்போர் தண்டிக்கப்படுவர்.
   விலங்குகளில் பெரிது ……………………..ஆகும். (ஆனை, ஆணை )
4. ………………….. உண்டு வாழ்வது இகழ்ச்சியைத் தரும்.
   தீமை செய்வோர்……………………….. பிறந்து உழலுவர் என்பர்.
   (இறந்து, இரந்து)
5. இப் பூவிலே ……………………….. கமழ்கின்றது.
   தீயோர் …………………… போனபோக்கெல்லாம் போகும். (மனம், மணம்)

**கா. கீழே தரப்பட்டுள்ள கூற்று வாக்கியங்களை வினா வாக்கியங்களாக்கி எழுதுங்கள்.**

1. சருகைக் கண்டு தணல் அஞ்சாது.
   ……………………………………………………………………………………
2. சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்.
   ……………………………………………………………………………………
3. புலிக்குப் பிறந்தது பூனையாக மாட்டாது.
   ……………………………………………………………………………………

Agaram Dhines

4. தடி எடுத்தவர் எல்லாம் வேட்டைக்காரராகார்.

………………………………………………………………………………….

5. தன் வீட்டு விளக்கு என்று முத்தமிடல் அறிவீனம்.

………………………………………………………………………………….

6. ஓர் ஊருக்குப் பல வழி உண்டு.

…………………………………………………………………………………..

**கி. சரியான இடத்தில் சொற்களை வைத்து வாக்கியங்களைப் பூரத்தி செய்யுங்கள்.**

1. எரிந்த …………………….. அணைந்தது கண்டு சினந்தான்.

   ஞானிகளுக்கு விதி ……………… இல்லை.

   (விலக்கு, விளக்கு)

2. கர்ணனின் …………………… பற்றி நாதனுக்குத் தெரியும்.

   வாக்கியங்களில் ……………….. இன்றி எழுதுதல் வேண்டும்.

   (வழு, வலு)

3. அம்மா ……………………… இட்டுக் கொழுக்கட்டை அவித்தார்.

   ……………….. மேலிட்டதால் நெற்பயிர்கள் அழிந்தன.

   (வெள்ளம், வெல்லம்)

4. …………………………அடைந்த வீடு வசிக்க உதவாது.

   …………………… நினைந்து ஊட்டும் தாய் உலகத்தில் சிறந்தவள்.

   (பால், பாழ்)

5. பாலன் கடல் …………………….. தாண்டி மீன்பிடிக்கச் சென்றான்.

   மரத்தின் ………………… கண்ட பாம்பு அங்கு நுழைந்தது.

   (அலை, அளை)

Agaram Dhines